இன்றைய செய்தி நாளைய வரலாறு

கலைஞர் 100 1924 - 2023

முரசொலி

Murasoli

நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி

www.murasoli.in facebook.com/murasoli180 twitter.com/murasoli180 instagram.com/murasoli180 youtube.com/murasoli180 murasolidaily@gmail.com

தொடக்கம் : 10.8.1942 – முரசு : 81 – ஒலி : 349 – திருவள்ளுவர் ஆண்டு 2054 – ஆடி 13 – சனிக்கிழமை 29 ஜூலை 2023 – கோவை ★★ 12 பக்கங்கள் Established : 10.8.1942 - Volume : 81 - Issue 349 : Thiruvalluvar Year - 2054 - Aadi 13 - Saturday 29 July 2023 - Kovai ★★ 12 Pages ₹ 5.00

இலவச மின்சாரம் வழங்கி - தமிழ்நாட்டு வேளாண் பெருங்குடி மக்கள் வளம் பெற தலைவர் கலைஞரே காரணகர்த்தாவாக விளங்குகிறார்!

இரண்டாண்டு கழக ஆட்சியில் 2 லட்சம் மின் இணைப்புகள் வழங்கி சாதனை!

திருச்சியில் 'வேளாண் சங்கமத்தை' தொடங்கிவைத்து - 50 ஆயிரம் கூடுதல் விவசாய இலவச மின் இணைப்புகள் வழங்கி முதல்வர் மு.க.ஸ்டாலின் உரை!

திருச்சி, ஜூலை 29-

திருச்சியில், நேற்று முன்தினம் காலை, 'வேளாண் சங்கமம் - 2023'ஐ தொடங்கி வைத்து, கூடுதலாக 50 லட்சம் இலவச விவசாய மின் இணைப்புகள் வழங்கிச் சிறப்புரையாற்றிய முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள், "கடந்த இரண்டாண்டு கால கழக ஆட்சியில் 2 லட்சம் இலவச மின் இணைப்புகள் வழங்கி கழக அரசு சாதனை படைத்துள்ளது" என்று குறிப்பிட்டார்.

முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள், நேற்று முன்தினம் (27.7.2023) திருச்சிராப்பள்ளியில் வேளாண்மை உழவர் நலத்துறை சார்பில் நடைபெற்ற "வேளாண் சங்கமம் 2023" மற்றும் விவசாயிகளுக்கு 50,000 கூடுதல் இலவச விவசாய மின் இணைப்புகள் வழங்கும் விழாவில் கலந்துகொண்டு ஆற்றிய உரை வருமாறு:-

மிக மிக பசுமையான நிகழ்ச்சியில் கலந்து கொள்ளக்கூடிய ஒரு வாய்ப்பு எனக்கு ஏற்படுத்தப்பட்டு இருப்பதை எண்ணி நான் மகிழ்ச்சி அடைகிறேன். காரணம் இப்போது மனமும் பசுமையாகி விடுகிறது. சில நாட்களுக்கு முன்பு சென்னையில் நடைபெற்ற உழவர் உற்பத்தியாளர் நிறுவனங்களின் கண்காட்சியைப் பார்வையிட்டுச் செல்லுகிற நேரத்தில், இன்றைக்கு நான் பெற்ற உணர்வை அன்றைக்கு நான் பெற்றேன்.

கண்கொள்ளாக் காட்சியை காணிக்கையாக்கிய அமைச்சர் எம்.ஆர்.கே.வுக்கு நன்றி!

பழங்கள், காய்கனிகள் - ஆகியவற்றை மொத்தமாக ஒரே இடத்தில் பார்ப்பது என்பது கண்கொள்ளாக் காட்சியாக அமைந்தது. அந்த உணர்வை எனக்கு ஏற்படுத்தித் தந்திருக்கக் கூடிய, அந்த பெரும் வாய்ப்பை எனக்கு உருவாக்கித் தந்திருக்கக்கூடிய வேளாண் மற்றும் உழவர் நலத்துறை அமைச்சர் எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம் அவர்களுக்கு முதலில் என்னுடைய நன்றியை காணிக்கையாக்க விரும்புகிறேன்.

நம்முடைய எம்.ஆர்.கே. பன்னீர் செல்வம் அவர்களைப் பொறுத்தவரைக்கும், அவரை 'வேங்கையின் மைந்தன்' என்று நாங்கள் அரசியல் மேடைகளில் சொல்வதுண்டு. ஆனால் வேளாண் துறை அமைச்சராக அவர் பொறுப்பேற்றதற்குப் பிறகு அவர் ஆற்றி வரக்கூடிய பணிகளைப் பார்க்கும் போது, அவர் உழவர் மகனாகவே இப்போது மாறியிருக்கிறார்.

வேளாண் துறையையே தலைசிறந்த துறைகளில் ஒன்றாக அவர் மாற்றியிருக்கிறார்.

கழக ஆட்சி அமைந்ததற்குப் பிறகு அனைத்துத் துறைகளும் ஒருசேர வளர வேண்டும் என்று நாங்கள் உழைத்து வருவதை நீங்கள் எல்லாம் நன்கு அறிவீர்கள். அதில் மிகச் சிறப்பான வளர்ச்சியை வேளாண் துறையும் பெற்றுள்ளது. மற்ற துறைகளைப் போல வேளாண் துறையை, நினைத்த உடனே வளர்த்துவிட முடியாது. மற்ற துறைகளை வளர்க்க நிதி வளம் இருந்தால் போதும். ஆனால், வேளாண் துறையை வளர்க்க, நிதித்துறை மட்டுமல்ல, நீர்வளமும் வேண்டும். தேவையான இடுபொருட்கள் காலத்தில் கிடைக்க வேண்டும்.

மண்ணும் மனமும் ஈரமானதால், 'வேளாண் சங்கமம்' நடத்த முடிகிறது!

கழக ஆட்சி அமைந்ததும் நீர் வளமும் கைகொடுத்தது. பருவ மழையும் முறையாகப் பெய்து உழவர்களுக்கு உதவியாக இருந்தது. வேளாண் பெருங்குடி மக்களுக்குத் தேவையான இடுபொருட்களை வேளாண் துறை குறித்த காலத்தில் தேவையான அளவு வழங்கியது. அதனால் உற்பத்தி பெருகியது. உற்பத்திப் பரப்பும் அதிகமானது! மண்ணும் ஈரமானது. உழவர்களது உள்ளமும் ஈரமானது. மண்ணும் மக்களும் மகிழ்ந்தார்கள். அதனால்தான் இதுபோன்ற வேளாண் சங்கமத்தை நம்மால் இன்றைக்கு பெருமையோடு நடத்த முடிகிறது.

வேளாண்மைக்கு தனி நிதிநிலை அறிக்கை மூலம் பல புதிய திட்டங்கள்!

கழக அரசு அமைந்ததும் வேளாண்மைத் துறைக்கு கூடுதல் முக்கியத்துவம் தரும் வகையில். நம்முடைய எம்.ஆர்.கே. பன்னீர் செல்வம் அவர்கள் குறிப்பிட்டுக் காட்டியதுபோல, வேளாண்மைக்கு என தனி நிதிநிலை அறிக்கை தாக்கல் செய்யப்பட்டது. பல்வேறு புதிய திட்டங்களை நாம் தொடங்கி இருக்கிறோம்.

★ கலைஞரின் அனைத்துக் கிராம ஒருங்கிணைந்த வேளாண் வளர்ச்சித் திட்டம்

★ முதலமைச்சரின் மானாவாரி நில மேம்பாட்டு இயக்கம்

★ வேளாண் நிலங்களில் நீடித்த பசுமைப் போர்வைக்கான இயக்கம்

★ நீர்ப்பாசன நவீன மயமாக்கல் திட்டம்

★ வேளாண்மை தொழில்நுட்ப மேலாண்மை முகமை

★ மண்வள மேலாண்மை

★ இளைஞர்களை தொழில் முனைவோர் ஆக்குதல்

- ஆகிய திட்டங்கள் முன்னெடுக்கப்பட்டு முனைப்புடன் செயல்படுத்தப்பட்டு வருகிறது. அந்த வரிசையில்தான் இதுபோன்ற கண்காட்சிகள் நடத்தப்படுகின்றன.

உணவு தானிய உற்பத்தியில் சாதனை படைத்திருக்கிறோம்!

நமது அரசு பொறுப்பேற்று, செயல்படுத்திய திட்டங்களினால், ஆறு ஆண்டுகளுக்குப் பிறகு 2021-2022ஆம் ஆண்டு 119 இலட்சத்து 97 ஆயிரம் மெட்ரிக் டன் அளவில் உணவு தானிய உற்பத்தி செய்யப்பட்டு ஒரு சாதனையை நாம் படைத்திருக்கிறோம்.

குறுவை சாகுபடியை மேற்கொள்வதற்காக கடந்த 2022ஆம் ஆண்டில் மேட்டூர் அணையை உரிய தேதிக்கு முன்னரே திறந்த காரணத்தினால், டெல்டா மாவட்டங்களில் 5 இலட்சத்து 36 ஆயிரம் ஏக்கர் பரப்பளவில் குறுவை சாகுபடி மேற்கொள்ளப்பட்டு, 47 ஆண்டுகளில் நிகழாத சாதனையை நாம் எட்டியிருக்கிறோம்.

உழவர்களின் தேவைகளுக்கு முக்கியத்துவம் அளித்து வரும் நமது அரசு, நிலத்தடி நீரினைப் பயன்படுத்தி, உழவர்கள் அதிக பாசனப் பரப்பில் வேளாண் செய்ய ஏதுவாக கடந்த இரண்டு ஆண்டுகளில் ஒரு இலட்சத்து 50 ஆயிரம் புதிய மின் இணைப்புகளை வழங்கி சாதனை படைத்துள்ளது.

அந்த சாதனைப் பயணத்தின் தொடர்ச்சியாகத்தான், மேலும் 50 ஆயிரம் புதிய மின் இணைப்புகள் இந்த விழாவில் வழங்கப்படுகின்றன. கலைஞரின் அனைத்து கிராம ஒருங்கிணைந்த வேளாண் வளர்ச்சித் திட்டமானது, இதுவரை 5 ஆயிரத்து 201 கிராம ஊராட்சிகளில் செயல்படுத்தப் பட்டுள்ளது. இந்த ஆண்டு 2 ஆயிரத்து 504 ஊராட்சிகளில் செயல்படுத்தப்பட உள்ளது.

2023-24ஆம் ஆண்டை, "உலக சிறுதானிய ஆண்டாக" நாம் கொண்டாட இருக்கிறோம். சிறுதானிய இயக்கத்தை நாம் நடத்தி வருகிறோம் என்பதை நீங்கள் எல்லாம் நன்கு அறிவீர்கள்.

ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியின உழவர்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்த அவர்களுக்கு நடைமுறையில் உள்ள மானியத்துடன் 20 விழுக்காடு கூடுதல் மானியத்தை அரசு வழங்கி வருகிறது. இதற்கென 11 கோடி ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு, சிறப்புத் திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

ஒற்றைச் சாளர வலைதளம் 'கிரெய்ன்ஸ்' உருவாக்கம்!

'தமிழ் மண் வளம்' என்ற இணையதளத்தை நான் தொடங்கி வைத்துள்ளேன். விவசாயிகளுக்கு மிகுந்த பயனளித்துவரும் 'உழவன் செயலி' பயன்பாட்டில் உள்ளது. இந்தியாவிலேயே, முதல் மாநிலமாக நமது அரசின் நலத்திட்டங்கள் சரியான பயனாளிகளுக்குச் சென்றடைவதை உறுதிசெய்திட உழவர்களின் அனைத்து விவரங்களையும் உள்ளடக்கிய ஒற்றைச் சாளர வலைத்தளமான 'கிரெய்ன்ஸ்' (GRAINS) உருவாக்கப்பட்டுள்ளது.

ஒன்றிய அரசால் நிர்ணயிக்கப்பட்டுள்ள குறைந்தபட்ச ஆதரவு விலையைவிடக் கூடுதலாக சன்ன ரக நெல்லுக்கு குவிண்டாலுக்கு 100 ரூபாயும், இதர ரகங்களுக்கு 75 ரூபாயும் ஊக்கத்தொகையாக வழங்கப்பட்டு வருகிறது.

சிறப்பு ஊக்கத் தொகை! நுண்ணீர்ப் பாசன அமைப்புகள்!

கடந்த ஆண்டில், நெல் கொள்முதலில் ஊக்கத்தொகையாக மட்டுமே 376 கோடியே 63 இலட்சம் ரூபாய் வழங்கப்பட்டுள்ளது. கரும்பு விவசாயிகள் நலனைக் கருத்தில் கொண்டு, ஒன்றிய அரசு அறிவித்த ஆதார விலையானடன் ஒன்றுக்கு 2821 ரூபாய்க்கு மேல் 195 ரூபாய் சிறப்பு ஊக்கத்தொகையாக வழங்கி வருகிறது.

உழவர்களிடையே காய்கறிகள், பழங்கள் பயிரிடுவதை ஊக்குவித்து வருகிறோம். பாசன நீரினை சிக்கனமாகப் பயன்படுத்த ஏதுவாக நுண்ணீர்ப் பாசன அமைப்புகள் நிறுவப்பட்டுள்ளது.

வேளாண் இயந்திர மயமாக்குதலையும், விளைபொருட்களின் மதிப்புக் கூட்டுதலையும் ஊக்கப்படுத்துகிறது. வேளாண் இயந்திர வாடகை மையங்கள் அமைத்தல், 'இ'வாடகை கைபேசி செயலி வாயிலாக இயந்திரங்களை வாடகைக்கு வழங்குதல் ஆகியவற்றையும் நமது அரசு செயல்படுத்தி வருகின்றது.

தொடர்ச்சி 4 ஆம் பக்கம்

முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (27.7.2023) திருச்சிராப்பள்ளியில் வேளாண்மை உழவர் நலத்துறை சார்பில் நடைபெற்ற "வேளாண் சங்கமம் 2023" மற்றும் விவசாயிகளுக்கு 50,000 கூடுதல் இலவச விவசாய மின் இணைப்புகள் வழங்கும் விழாவில் கலந்து கொண்டு விழாப் பேருரையாற்றினார்.

"வேங்கையின் மைந்தன்" இன்று உழவர் மகனாகவே மாறியிருக்கிறார்!

பழங்கள், காய்கனிகள் - ஆகியவற்றை மொத்தமாக ஒரே இடத்தில் பார்ப்பது என்பது கண்கொள்ளாக் காட்சியாக அமைந்தது. அந்த உணர்வை எனக்கு ஏற்படுத்தித் தந்திருக்கக் கூடிய, அந்த பெரும் வாய்ப்பை எனக்கு உருவாக்கித் தந்திருக்கக்கூடிய வேளாண் மற்றும் உழவர் நலத்துறை அமைச்சர் எம்.ஆர்.கே.பன்னீர் செல்வம் அவர்களுக்கு முதலில் என்னுடைய நன்றியை காணிக்கையாக்க விரும்புகிறேன்.

நம்முடைய எம்.ஆர்.கே. பன்னீர் செல்வம் அவர்களைப் பொறுத்தவரைக்கும், அவரை 'வேங்கையின் மைந்தன்' என்று நாங்கள் அரசியல் மேடைகளில் சொல்வதுண்டு. ஆனால் வேளாண் துறை அமைச்சராக அவர் பொறுப்பேற்றதற்குப் பிறகு அவர் ஆற்றி வரக்கூடிய பணிகளைப் பார்க்கும் போது, அவர் உழவர் மகனாகவே இப்போது மாறியிருக்கிறார்.

வேளாண் துறையையே தலைசிறந்த துறைகளில் ஒன்றாக அவர் மாற்றியிருக்கிறார்.

இந்தியாவின் வெளிநாட்டுக் கடன் மட்டும் ரூ.46 லட்சத்து 80 ஆயிரம் கோடி!

மக்களவையில் நிர்மலா சீதாராமன் தகவல்!

புதுடெல்லி, ஜூலை 28-

இந்தியாவின்வெளிநாட்டுக் கடன் தொடர்பாக மக்களவையில்எழுப்பப்பட்ட கேள்விக்கு, ஒன்றிய நிதியமைச்சர்நிர்மலாசீதாராமன் பதிலளித்துள்ளார். அதில், "ரிசர்வ் வங்கியின் தரவுகள் படி, நாட்டின் வெளிநாட்டுக்கடன்624.65பில்லியன் அமெரிக்கடாலராக(சுமார் ரூ. 46 லட்சத்து 80 ஆயிரம் கோடி ரூபாய்) உயர்ந்துள்ளது.

அதாவது, உலக வங்கி உள்ளிட்ட வெளிநாட்டு அமைப்புகளிடமிருந்து பெறப்பட்ட கடன் 74.84 பில்லியன் டாலர். இதில், அரசாங்கம் மட்டும் வாங்கிய கடன் 63.45 பில்லியன் டாலர். 11.39 பில்லியன் டாலர்அரசுஅல்லாதநிறுவனங்கள் வாங்கியுள்ளன. இதில்,சர்வதேசநாணயநிதியத்திடம் வாங்கப்பட்டுள்ள கடன் 22.26 பில்லியன் டாலர்" என தெரிவித்துள்ளார்.இந்தியாவின் வெளிநாட்டுக் கடன், கடந்த 4 ஆண்டுகளில் 12 சதவிகிதம் அதிகரித்துள்ளதாகவும்அவர்கூறியுள்ளார். ரிசர்வ் வங்கியின் தரவுகளின்படி, இந்தியாவின் வெளிநாட்டுக்கடன்கடந்த 2021மார்ச்இறுதிவரையில், 573.4 பில்லியன் டாலராக இருந்தது. இது, 2022 மார்ச் மாத இறுதியில் 619.1 டாலராக அதிகரித்தது. இதுவும், இந்தியாவின் ஒட்டுமொத்தக் கடனில் மூன்றில் ஒருபகுதி மட்டுமே ஆகும். ஏற்றுமதி கடன்கள், வணிகக் கடன்கள், வெளிநாடுவாழ் இந்தியர்களின் வைப்புத் தொகைகள், குறுகியகாலக் கடன்கள், நாணயம்மற்றும் வைப்புத்தொகைகள், கடன் பத்திரங்கள், முன்பணங்கள், நேரடி முதலீடு உள்ளிட்டவைதனியாகும். அவை நேரடி வெளிநாட்டுக் கடனை விட இரண்டு மடங்கு அதிகம் என்பது குறிப்பிடத்தக்கது.

மணிப்பூரில் பாதுகாப்பு, உணவு, வேலை எதுவும் இல்லை!

தமிழ்நாட்டில் நாங்கள் பாதுகாப்பாக இருக்கிறோம்!

கோவையில் மணிப்பூர் மக்கள் உருக்கம்!

கோவை, ஜூலை 29-

'மணிப்பூரில் பாதுகாப்பு, உணவு, வேலை எதுவும் இல்லாததால், அங்கிருந்து தப்பி வந்துள்ளோம். தமிழ்நாட்டில் நாங்கள் பாதுகாப்பாக இருக்கிறோம்' என ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்ட கோவை வாழ் மணிப்பூர் மக்கள் தெரிவித்துள்ளனர். கோவை டாடாபாத் பகுதியில் மக்கள் சிவில் உரிமைக் கழகம் சார்பில் மணிப்பூர் சம்பவத்தை கண்டித்து ஆர்ப்பாட்டம் நடைபெற்றது. இதற்கு அந்த அமைப்பின் தேசிய செயலாளர் பாலமுருகன் தலைமை தாங்கினார். இந்த ஆர்ப்பாட்டத்தில் கோவை வாழ் மணிப்பூர் மாநிலத்தை சேர்ந்த குத்தி இன மக்களும், வடகிழக்கு மாநிலங்களைச் சேர்ந்த மக்களும் 200க்கும் மேற்பட்டோர் குடும்பத்துடன் பங்குபெற்றனர்.

அப்போது மணிப்பூரில் அமைதியை நிலை நாட்ட வேண்டும், பாலியல் துன்புறுத்தலில் ஈடுபட்டவர்கள் மீது கடும் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்பன உள்ளிட்ட கோரிக்கைகளை வலியுறுத்தி பதாகைகளை கையில் ஏந்தியபடி மணிப்பூர் மக்கள் தங்கள் குழந்தைகளுடன் பங்கேற்றனர்.

பின்னர் மணிப்பூர் மக்கள் அளித்த பேட்டி: மணிப்பூர் கலவரத்திற்கு குரல் கொடுக்கும் தமிழக மக்களுக்கும், போராட்டம் நடத்துவதற்கும் நன்றி. பா.ஜ.வைச் சேர்ந்த மாநில முதல்வர், பிரதமருக்கு கண்டனம் தெரிவிக்கிறோம். இவர்கள் நினைத்தால் கலவரத்தை தடுத்திருக்கலாம். ஆனால் குர்தி இன மக்கள் இம்பால் பகுதியிலிருந்து வெளியேற்றப்பட்டுள்ளனர். ஏனெனில் மெய்தி இன மக்கள் அங்கு அதிகளவில் உள்ளனர். இம்பாலில் படுகொலை, பொது வெளியில் பெண்கள் பாலியல் வன்கொடுமைக்கு உள்ளாக்கப்பட்டு உள்ளனர். எங்களுக்கு அரசியலமைப்பு சட்ட உரிமை மறுக்கப்பட்டு உள்ளது. அங்கு புகார்கள் மீது காவல்துறையினர் நடவடிக்கை எடுப்பதில்லை. எங்களுக்கு அவர்களின் மேல் இருந்த நம்பிக்கை போய்விட்டது. மணிப்பூரில் அமைதி திரும்ப வேண்டும். இதே நிலையில் வாழ முடியாது. அங்கு பாதுகாப்பு இல்லை. வேலை இல்லை. சாப்பிட உணவு இல்லை. பிரார்த்தனை செய்ய சர்ச் கூட இல்லை. அங்கு வாழ வழியின்றி பலர் தப்பித்து இங்கே வந்துள்ளனர். இங்கு தமிழ்நாட்டில் எங்களுக்கு பாதுகாப்பு கிடைக்கிறது, இங்கு நாங்கள் பாதுகாப்பாக இருக்கிறோம்.

இவ்வாறு அவர்கள் கூறினர்.